
ஓலை 49 | ஓசை 168 | நளி (நவம்பர்) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும்.

**Translation:**

In his station, all unswerving, if man self subdue,
Greater he than mountain proudly
rising to the view.

**Explanation:**

More lofty than a mountain
will be the greatness of that man
who without swerving from his domestic state,
controls himself.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல

## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்

சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்



### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,

மயிலாடுதுறை - 609001

# அண்டமெல்லாம் ஆட்சிசெய்யும் அகிலாண்டேஸ்வரி

**பா வகை - அறுசீர் மண்டிலம்**



அகிலம் ஆளும் ஈஸ்வரியே
அன்பின் உருவாம் தாயிவளே
அகத்தின் உள்ளே குடிவைத்தால்
அருளைப் பொழியும் கருணையளே

பிணியைத் தீர்க்க பெரும்விரதம்
பிழைகள் இன்றி செய்தவளாம்
அணியாய் இருந்தே அழகுசெய்வாள்
அண்டம் காக்கம் பூரணியே

குடைகள் விரிக்கும் நாகமது
குறைகள் தீர்க்கும் யோகமது
விடையே இல்லா வலிகளுக்கு
விடியல் தருவாள் ஆரணங்கு

சமய புரத்தில் மகமாயி
சாந்த சொரூபி கருமாரி
அமைதி அளிக்கும் வேப்பிலையே
அகற்றும் துன்பம் வாயிலிலே

தாயே உன்னை நாடிவந்தோம்
தடைகள் தகர்க்க வழிகொடுப்பாய்
தூய பக்தி அதனாலே
துள்ளி வருவாய் ஓம்சக்தி

விளக்கை ஏற்றி அழைக்கின்றேன்
விரைவாய் வருவாய் மீனாட்சி
உளத்தில் உனையே நினைக்கின்றேன்
உயிராய் உறவாய் வாதாயி

ஈசன் பாதி நீயன்றோ
இளகும் நெஞ்சம் உனதல்லோ
பாசம் வைத்தே பணிகின்றேன்
படரும் உணர்வே பராசக்தி

மாரி நீயும் தந்திடவே
மண்ணும் குளிரும் பசுமையிலே
வாரி வாரி அணைப்பதற்கே
வருவாய் தாயே மலைமகளே

முதலை உந்தன் வாகனமாம்
முந்தி வந்தே நின்றிடுமாம்
பதமாய் அரிமா சேர்ந்திடுமாம்
பரமன் துணையே உன்னிடமாம்

அழகன் குமரன் உன்மகனாம்
அளித்தாய் வேலை அவனிடமாம்
அழியாப் புகழைக் கொண்டவளாம்
அணையும் மனமும் அவளிடமாம்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# இன்முகம்

இன்புறும் பொழுதெலாம்
இயல்புடன் வந்திடும்
அன்புடன் அனைத்தையும்
அழகுடன் செய்திடும்
என்மனம் நினைப்பதை
எனக்குமுன் அறிந்திடும்
என்னவன் அல்லவா
இன்முகம் கொண்டவன்

கொண்டவன் என்னவன்
கோமகன் போன்றவன்
தண்ணொளி பாய்ச்சிடும்
தன்னிக ரற்றவன்
கண்ணவன் என்பதால்
கலங்கிடும் போழ்தினில்
நண்பனைப் போலதான்
நன்னெறி கூறுவான்.



கவிஞர் கவிதா சீனிவாசன்

அகர முதல

# ஹைக்கூ

மழையோய்ந்த காலை
வாகனத்தில் குடியேறும் நத்தை
மகிழ்ச்சியாய் நடைபயணம்
***

கடற்கரை குழாய்நீரில்
கால் கழுவுதலை நிறுத்துகிறேன்
தாகம்தணிக்கும் காகம்
***

கார்த்திகைமாத காலை
மீன் வாங்கிச்செல்லும் தாய்
பசியாறும் பூனைகள்.
***

மழையோய்ந்த தீபாவளி
தெருவில் பசியாறும் நாய்க்குட்டி
வெடியோடு காத்திருக்கும் சிறுவன்



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# அடக்கு

சாகும் வரை வேர்வை வர உழைத்தாலும்
வேகும் வயிறு என்றும் அணைந்ததே இல்லை
தூபங்கள் மேல் தணலை இட்டாற் போல்
சாபங்கள் இங்கு நீங்குவதே இல்லை

அடங்கு, அடங்கு பணிந்தே அடங்கென
அடக்குமுறைக்கு எங்கும் குறைவே இல்லை
துங்கத்தில் எரியும் செந்தீயில் குளித்தெழுந்தாலும்
இடக்கு செய்யும் ஏதேச்சதிகாரங்களுக்கு அழிவேயில்லை

உயிரின் உன்னதம் உணரா மனிதன்
விடுதலையின் மாண்பை உணர்வது எப்போழுது?
ஐம்பொறி அடக்கமதன் அர்த்தம் புரியாதவன்
தன் உரிமையின் சக்தியை உணர்வது எப்பொழுது?

விழு, விழுந்து எழு, விழுந்து மீண்டும் எழு,
விழ, விழ மீண்டும், மீண்டும் எழு
தோல்வியும் வெற்றியின் முதல்படியே
அச்சம் தவிர்த்து உன்னைச் செதுக்கு

அல்லனவற்றை கேட்காது, பேசாது
பார்க்காது, நினையாது நல்லறிவைப் பெருக்கிடு
பசித்திரு, தனித்திரு, விழித்திரு
ஒடுங்காது ஓங்கி மிதி, அடங்க மறு
அடக்குவோரை திமிறி எழுந்து அடக்கு
மடைமாற்று சக்திகள் கிடை மட்டமாகிட
பேதமில்லா மனிதம் சமை
எல்லைக் கோடுகளற்ற புதியதோர்
உலகின் அச்சாணி நீயாவாய்



கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு ,சென்னை

# தணியாத தாகம்

ஏற்றத் தாழ்வில்லா சமுதாயத்தில் வாழ்ந்திட
ஏழை என்றும் அடிமை என்றும்

எவரும் வாழாமல்
ஏற்றம் பெற்றிட

எல்லாமும் எல்லோருக்கும்
என்ற பொதுவுடைமையோடு

ஏச்சிப் பிழைக்காமல்
உழைத்தே வாழ்ந்திட

அனைவரும்
கல்வியறிவு பெற்றே சிறந்திட

அறியாமை இருளகன்று
அறிவொளி பெருகிட

உழைக்கும் மக்களை
சுரண்டிப் பிழைக்காமல்

ஊருக்கு நல்லது
செய்வோர் நிறைந்திட

தன்னலம் அகற்றி
பொதுநலம் பேணிட

தங்கு தடையின்றி
உணவது கிடைத்திட



கையூட்டு வாங்காமல்
காரியங்கள் ஆற்றிட

களங்கம் இல்லாமல்
களிப்போடு வாழ்ந்திட

இயன்றவரைப் பலருக்கும்
இல்லையெனாது கொடுத்தே

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசாமல்

உண்மையைப் பேசி
உயர்வாய் வாழ்ந்திடவே

எந்நாளும் தணியாத
தாகத்தோடு
எண்ணிடுவீரே!

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# குறுங்கவிதைகள்



இருட்டை
விரட்டும் போதும்,
சமைக்க
எரிக்கும் போதும்,
பக்திக்காக
முகம்காட்டும் போதும்
மட்டுமே
தீயின் முகம் அழகு.
/
யாரின்
பின்னாலும்
நான் போகவில்லை.
என் பின்னால்
வருபவர்களுக்கு
நல்வழி
காட்ட வேண்டியது
என் கடமை.
/
மொட்டுகள்
இதழ்களை விரித்து,
பருவமடைந்த பின்னரே;
பூக்களுக்கும் வண்டுகளுக்கும்;
இடையே காதல் மலர்கிறது.
/
அச்சமின்றி, கூச்சமின்றி;
வெட்கமின்றி, பயமின்றி;
பெண்மையின் நாணமின்றி;
திறந்த மேனியாய் கிடக்கிறது
பூக்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# பந்தய வாழ்விலே

படிக்கும் மாணவரை
படியேற்ற பெற்றோர்&ஆசிரியர் பங்கு.
சரித்திர படைக்கும் மாணவருக்கும்,
சாஸ்திரம் கொடுக்கும் ஆசிரியரும்
சித்திரம் போலவே அழகாக
சீர்மிகு வாழ்க்கைக்கும் வழிவகுத்து
சத்தமாகவே சுகம் கொடுத்து
சூத்திரங்களையும் பல கொடுத்து
செயற்கரிய செயல்களையும்
சேவையாகவே செய்து விட்டு
சைலம் போலவே உயரவைக்க
சொந்த குழந்தைபோல பாவித்து,
சோதனைகளும் கடக்க வைத்து ,
சௌந்தர்ய வாழ்க்கைக்கு வழிவகுக்க,
சகலகலா ஆசிரியரும்,
சகலகலைகளும் கொடுத்திட வேண்டுமே!
படித்து பணிக்கு செல்லும்
பட்டதாரிகளுக்கு பந்தய அறிவுரை
பக்குவமான நேரமிது,
பார்த்து பழக வேண்டியது,
பிடித்து செய்ய வேண்டியது,
பீடிகை பல இதில் உள்ளது,
புதுமையாக செய்ய வேண்டியது,
பூரணமாக செய்ய வேண்டியது,
பையவும் சுறுசுறுப்பாகவும் செய்ய வேண்டியது,
பொறுமையை கையாள வேண்டும்.
போட்டியுள்ள வாழ்க்கையில்
பௌர்ணமியாய் ஜொலித்திடவே
பலமாக உழைத்து
பல உயர்வுகள் பெற்று
பெருமையுடன் வாழ வாழ்த்துகிறேன்.



கவிஞர் நீலாசுபாஷ்

# பேசும் பொற்சித்திரமே



எனக்காக வந்த வண்ண தேவதை
நீ பிறந்த போது மகிழ்ந்தேன்
எனக்கான கவலை எல்லாம் மறந்தேன்
சிரிக்கும் சிரிப்பை ரசித்து நின்றேன்
வீட்டில் வலம் வரும் போது
என் அம்மாவை நான் கண்டேன்
இதயத்திற்கு இதம் தந்த தேவதையே
உன் அன்பாலே கட்டி அணைத்தாய்
பல நேரத்தில் எனக்கு அம்மாவானாய்
மழலை பருவத்தில் பேசியதை எல்லாம்
நீ வளர்ந்தாலும் எனக்குள்ளே ரசிப்பேன்
செய்யும் சேட்டைகள் பலவாயினும் ஒவ்வொன்றும்
எங்களை மெய் மறக்கச் செய்தது
கள்ள கபடமில்லா சிரிப்பு மழையில் நனைந்தாலும்
உன்னைப் பார்த்ததும் கட்டி அணைக்கத் தூண்டியது
உன் வரவால் குடும்பமே மகிழ்ந்தது
பேசும் பொற்சித்திரமே நீ என்னோடு
பேசாத நாளில்லை தினமும் என்னோடு பேசிய அந்த
நொடியில் உலகத்தை மறந்து நின்றேன்
என் கண்ணே கண்மணியே ஆருயிரே

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# போதை பொருள்

விழித்திடு மனிதா! விழித்திடு
சாதிக்க பிறந்தவன் நீ
சாதனைகளை படைக்க பிறந்தவன் நீ

மனிதா விளங்கிக் கொள்!
போதை பொருள்
ஒரு நாளும்உன்னை
மேதை ஆக்கி விடாது

மனிதா விளங்கிக் கொள்!
நீ சீரான சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறாயா?
அல்லது சீர்கெட்ட சமுதாயத்தை
உருவாக்க விரும்புகிறாயா?



மனிதா விளங்கிக் கொள்!
இது உனக்கான கேள்வி
இதற்கு விடையளிப்பது உன் உரிமை
இந்த உலகம் உனக்கானது
நீ வாழும் வாழ்க்கை உனக்கானது
நீ எடுக்கம் முடிவுகளும் உனக்கானது

மனிதா விளங்கிக் கொள்!
நீ ஒரு சிறந்த படைப்பு
நீ சிறந்த படைப்புக்களை
இந்த உலகத்தில்
உருவாக்க வேண்டும்

மனிதா விளங்கிக் கொள்!
வாழ்ந்த நாட்கள் திரும்ப வராது
முடிந்த நிமிடங்கள் திரும்ப வராது
நாம் செலவழித்த அனைத்தும் திரும்ப வராது

மனிதா விளங்கிக் கொள்!
சிறந்த மனிதன் உலகை ஆள்வான்
சீரான பாதையில் வழிநடத்துவான்
இது உன்னுடைய வாழ்க்கை
உனக்கான வாழ்க்கையை சிறந்ததாக வாழ்ந்து
சிறந்த சமுதாயத்தை நீ உருவாக்க வேண்டும்

கவிஞர் சபியா பானு, இலங்கை

# பயணம்

கருவறையில் தொடங்கும்
மனித வாழ்வு
மண்ணறையில் முழுதாய்
நிறைவு பெறுகிறது

இடைப்பட்ட காலத்தில்
இன்பமும் துன்பமும்
வெயிலும் மழையுமாய்
மாற்றம் பெறுகிறது



வாழ்வுப் பாதையில்
வடிவங்கள் அமைத்து
சமயத்தில் மாறா
வடுக்களையும் தருகிறது

விடையற்ற வினாக்களுடன்
பல்வேறு தடைகள்
தடைகளைத் தாண்டிட
முயற்சியே உதவுகிறது

அன்பும் அறனும்
அவனியில் நிலைக்கச் செய்ய
அகிலத்தில் அன்றாடம்
சவால்களும் அதிகம்

புதிரான புதினங்கள்
புல்லரிக்கச் செய்திட
பூவுலகில் நாட்களும்
கடுகதியாய் நகர்கிறது

காலத்தைத் திட்டுவதால்
பயனேதும் ஆவதில்லை
ஞாலத்தில் சிறந்திட
நற்பண்புகள் பெருந்துணை

தேவைக்கு அதிகமாக
சேமித்து வைக்காமல்
தேவை உடையோருக்குத்
தருவது மகிழ்ச்சியே

விண்ணை முட்டுமளவு
விருட்சமாய்த் துளிர்க்கும்
விருப்பும் ஆசைகளும்
விபரீதத்தில் முடிகிறது

உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி
உயிர்ப்புடன் செயலாற்றிடின்
உயர்ந்தோரும் தாழ்ந்தோரும்
உள்ளளவும் போற்றிடுவர்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை (இலங்கை)

# அவள்!

பத்து திங்கள் பத்திரமாய் பாதுகாத்தவளே
கருவில் கண்ணும் கருத்துமாய் காத்தவளே
அனுதினமும் அனுமதியில்லா பசியிலும் பயந்தவளே
காணா குழந்தைக்கு ஏதுமாகிடுமோ என்று
உண்ணும் உணவில் கவனம் கொண்டவளே
பயந்து ஒடுங்கி பாதுகாப்பைத் தந்தவளே
வறுமை என்ற போதிலும் பெருமையோடு சுமந்தவளே
என் அன்பின் தாயே தரணியில் நீ இல்லையே
தேடும் குழந்தையாகி நிற்கிறேன்
நீ வரப்போவதில்லை என்றறிந்துமே
ஏற்க மறுக்கிறதே என் மனது
தென்றல் சுமந்து வரும் பூவின் வாசனையைப் போல
காற்றில் கலந்துயரும் பட்டம் போல
நினைவில் கலந்தாயே தினமும் வருடுகிறாய் என்னுள்ளே
அகவைகள் பத்து ஆகிப் போனதே
நினைவில் புது வடிவம் தினமும் கொண்டேதாலோ
புதிதாய் மலர்ந்த மல்லிகை போலத் தான் இருக்கிறாயே
பார்க்கும் காட்சியில் தாயோடு செல்கிறவரைக் காண்கையில்
துடிதுடித் தவித்தடங்குகிறது என்னுள்ளமே
காட்சிகள் பிழைப்பதாகிறதல்ல உணர்விலானது

ஏக்கங்கள் கொடுத்து தாக்கங்கள் தருகிறதே
வயதொன்று இல்லையே
மரணமும் கொய்திடத் தானே
அவளுக்கு அவ்வளவு வயதில்லையே
எமக்கென்றாகியாவது விதியெனும் விட்டுருக்கனுமே
பாசம் வேண்டாம் என்று சொல்லுமுறவுகளுண்டோ
தாயே தாங்கிட இயலாத பிரசவ வலி கொடுத்தேன் என்றோ
பிரிவின் வலியைத் தந்து சென்றாயோ
ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்க்க தன் பிள்ளை தானாய் வளரும்
அடிக்கொரு தரம் சொல்வாயே
தனித்து விட வில்லை தான் பாரமொன்றாகினோமோ

விதியின் சாரலோ
வல்லவனிட்ட நியதியோ
காலம் மாறினாலும் காயம் ஆறுவதில்லை



கவிஞர் சஹ்னாஸ் பேகம்,புத்தளம்(இலங்கை)

# தியானம்

தியானம் செய்யும் போது
மூச்சை கவனித்து
பின்பு எண்ணங்களை கவனித்து
மனதில் இருக்கும் எல்லாவற்றையும்
கடவுளிடம் பேசி முடித்தவுடன்
மனம் அமைதியாகி
சகிப்புத்தன்மை என்ற சிறப்பான சான்று
உனக்கு கிடைக்கும்
பொறுமை எனும் பொக்கிஷம் கிடைக்கும்
தியானம் செய்யும் போது
நிதானத்தை உணர்ந்து கொள்வாய்
நிதானத்தை உணர்ந்த பின்பு
எதை செய்வது செய்யக்கூடாது என்பதை
தெளிவாக முடிவெடுக்கும் திறன் பெற்று
கடவுள் நண்பனாக உன்னிடம் காட்டிய அன்பை
பிறரிடத்தில் காட்டுவது தியானம்.



கவிஞர் ஜெ.தேவிராஜசேகர்,சென்னை

# சிரஞ்சீவி நீயே

அடி தாங்கும் கல்
ஒருநாள் சிற்பமாகும்
மெய் வருந்தினால்தான்
மெய்யான வெற்றியாகும்

உண்மையான தியாகங்கள்
வீண் போவதில்லை
ஒருநாள் உன் புகழ்
உயரவானில் உலாப்போகும்

துக்கத்தில் துவளாதே
துடிக்காதே வலி தாங்கு
உருக்கின் உளியாகி
உறுதியாக உனைச் செதுக்கு

சிறு விதைக்குள்ளே
பெரு மரமுறங்கும்
ஒரு மரத்தினிலே
பல உயிருறங்கும்

திறமையெல்லாம்
வளர்த்துக் கொள்
உழைப்புதனைப்
பெருக்கிக் கொள்

குந்தியிருக்க நீ
குத்துக்கல்லல்லவே
குறையில்லை மனிதா
இறையிருக்க

குறி பார்த்துப்
பயணம் செய்
கூர்மையாக்குனை
வழியெல்லாம்



உனக்குள்ளே ஒரு சாதனையாளன்
மறைந்திருப்பான் மகாவல்லவன்
கண்டுபிடி கண்டெடு
காலத்தின் பரிசுதனை

உயர்ந்த கனவே
உன்னத லட்சியம்
உருப்பெருத்து அது
உலகாளும்

வெறுங்கல்லோ எவரையும்
விரைவாயீர்ப்பதில்லை
குடைந்திட்ட சிற்பங்கள்
கவராமல் இருந்ததில்லை

உன்னை நீயே
செதுக்கிக்கொள்
அழகிய சிற்பம்
அடாது ஆக்கிக்கொள்

உளி விழ
வலியே வருந்ாதே
உறக்கங்கள் வாழ்வில்
உதறிவிட்டுழைப்பாயே

சிற்பியும் நீயே
சிற்பமும் நீயே
சிறப்புற வெளிப்படு
சிரஞ்சீவி நீயே

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# சிலப்பதிகாரம் (பத்தொன்பது)

17. ஆய்ச்சியர் குரவை :

1. மாதரியின் மனையில் தீய நிமித்தங்கள்:

அன்று அரண்மனையில் நெய் அளக்கும் நாள் மாதரி தயாரானாள்
என்றும் இல்லாத அதிசயமாக வீட்டில் தீய நிமித்தங்கள் தோன்றின
கன்றின் கண்கள் நீரை சொரிந்தன பால் குடங்கள் உறையவில்லை
மன்றில் இருந்த வெண்ணெய் திரிந்தது , ஆவினம் பால் சுரக்கவில்லை
நன்றாக இருக்கும் கண்ணகிக்கு ஏதும் நிகழுமோ '' அஞ்சினாள் மாதரி
( மன்றில் : வாயில் முற்றம் )

2. குரவை ஆட்டம் :

நடந்திருக்கும் தீய சகுனங்கள் கண்டு மாதரி மனம் தளரவில்லை
கடந்தகாலத்தில் நப்பின்னை துயர்துடைக்க கண்ணன் ஆடியது
இடதுகாலை நிலத்தில் ஊன்றி குரவை ஆட்டம், கண்ணகி நலம்
கெடாதிருக்க மகள் ஐயை கை பிடித்து ஆடினாள் குரவைக் கூத்து

3. குரவைக் கூத்து ஆடத் தொடங்குதல் :

ஆயர்பாடியில் காளையை அடக்க கன்னி ஒருத்தி மாலையிடுவாள்
மாயவன் கண்ணபிரான் ஏழு காளைகளை அடக்கி மணம் புரிய
தூயவள் மாதரி எழு கன்னிகளை நிறுத்தி ஆடுவதே குரவை கூத்து
தீயவை நேராமல் கண்ணகியைக் காக்க ஆடுவதே குரவைக் கூத்து.

4. கண்ணபிரானின் குரவை கூத்து :.

ஏழு கன்னிகள் ஆடும் குரவைக் ஆட்டம் கண்ணன் லீலைகள் கூறும்
தவழ்ந்து வர கட்டிய உரல் குருந்தமரத்தினை முறித்த கதை ஆடினார்
மழையில் மேரு மலை குடையாக ஆவினங்கள் காத்ததை ஆடினார்
அழகிகளின் ஆடையை மறைத்துவைத்த களியாட்டத்தை ஆடினர்
குழலூதும் கண்ணன் இசையில் ஆவினம் மெய்மறந்ததை ஆடினார்

5. இன்னிசையில் கண்ணன் :

கண்ணனின் குழல் ஓசை ஆயர்பாடியில் எப்பவும் கேட்கலாம்
வண்ணமயமான யாழ்கள் பாணர்கள் பண இசைப்பார்கள்
எண்ணமெல்லாம் கண்ணனாக பெண்கள் பேரியாழ் ஒலிக்கும்
திண்ணமாக ஆயர்பாடியில் ஆடும் குரவை கூத்து நிகரற்றது .

6. திருமாலைப் போற்றுதல் :

வாசுகி பாம்பை கயிறாகக்கொண்டு கடலைக் கடைந்த திருமாலே
மாசிலா யசோதையிடம் கயிறால் கட்டுண்டு தவழ்ந்த திருமாலே
யாசிக்கும் மழலைகளுக்கு வெண்ணெய் திருடி தந்த திருமாலே
நேசிக்கும் பாண்டவருக்கு தூதனாக போர் புரிந்த திருமாலே போற்றி



18. துன்பமாலை :

1. கோவலன் கொலை மாதரி உரைத்தல் :

குரவைக் கூத்து முடிந்து மாதரி திருமாலை வணங்கிவர சென்றாள்
அரசல்புரசலாக மக்கள் பேசுவதைக் கேட்டு அதிர்ந்தாள் மாதரி
அரசனால் கோவலன் கள்வன் என மாண்ட செய்திதான் அது
சுரம் வந்ததுபோல் மூச்சிரைக்க வீடு வந்து சேர்ந்தாள் மாதரி

எல்லோரும் அவளை நண்ணி, என்ன ஆயிற்று கூறு?'' என்றனர்
அல்லாத செய்தி எப்படி கண்ணகியிடம் சொல்வது , தயங்கினாள்
நல்லவன் கோவலன் சிலம்புக் கள்வன் என கொலையுண்டான்
பொல்லாத செய்தியைக் கேட்டு மயங்கி விழுந்தாள் கண்ணகி

-தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# அணைப்பின் கதகதப்பு



கருப்பையின் சூடு
தாயின் அரவணைப்பில்!
பசியறிந்து இதழ் ஒற்றி
தேவையைத் தீர்த்திடும்
தாயின் அணைப்பு!
மாளிகையோ குடிசையோ
குளிருக்கு அடக்கமாய்
கம்பளியின் கதகதப்பு
தாயவள் சேலை தந்திடும்!
உணர்ச்சியைத் தூண்டி
உயிரை உருக்கும் காதல்
தந்திடும் நெருக்கமான
அணைப்பு!
பரிதவித்து தோள் சாய
அணைத்திடும் கைகள் தரும்
ஆறுதலான அணைப்பு!
அணைப்பில் கதகதப்பில்
சுருண்டு கொள்ளத்தான்
விழையுதே மனது!

கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# விடத்தினும் கொடுதே விரைவு உணவு

அவசரகதியில் உண்கிறோம்
அல்லலில் உழல்கிறோம்

அன்னத்தை மறந்தோம்
ஆரோக்கியத்தை இழந்தோம்

வர்ணம் பூசிய
பதார்த்தங்களில் வீழ்ந்தோம்

இயற்கையை இகழ்ந்தே
செயற்கையைப் புகழ்கிறோம்

புரியாத நோய்களினால்
மனஉளைச்சல் அடைந்தோம்

தொற்றும் வந்தது
வேதனையில் ஆழ்ந்தோம்



எங்கும் இரசாயனம்
அதிலும் பாசாணம்

காய்கனிகளை ஒதுக்கியே
அசைவத்தைப் புசிக்கிறோம்

மண்பானைச் சமையலை
மறந்தே போனோம்

துரிதத்தில் துன்பமே
தொடருது துயரமே

ஊட்டச்சத்து சக்கையானது
உடலது சீரழிவானது

விடத்தினும் கொடுதே
விரைவு உணவானதே.

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# பணம்

கருவறை முதல் கல்லறைவரை தொடரும்
கருவை சுமக்கவும் பணம் போதும்
கல்லறையை தேர்ந்தெடுக்கவும் பணம் போதும்
கண்கலங்காமல் வாழவும் பணமே போதும்



போதும் என சொல்லமுடியாத போதையிது
தேட வைத்து மறைந்து கொள்ளும் பேதையிது
தேடுவோரை பாதளத்திற்கே இழுத்திடும் பாதையிது
பற்றற்றோரை துளியும் நெருங்காத மேதையிது

கையில் இருந்தால் நழுவி ஓடும்
பிடித்து வைத்தாலும் பிரிந்து ஓடும்
மனம் பித்தாய் மாறி பிறகே ஓடும்
சமாதியாக்கும் வரை சளைக்காமல் ஓடும்

இல்லாதவன் இல்லாளுக்கும் இனிமையாவதில்லை
ஈன்றோருக்கும் ஈன்றெடுத்தவருக்கும் அருமையாதில்லை
பணம் இல்லாமல் இருத்தல் அனைவருக்கும் தொல்லை
பணமே வாழ்க்கையில்லை என்பது புரிவதில்லை

மனம் தினம் நாடுவது பணம்
நாடு கடக்கவும் துணியுது குணம்
மாற்றானிடம் பணமிருந்தால் ஏற்படுது சினம்
அடுத்தடுத்த தலைமுறைக்கும் சேர்க்காமல் வேகாதாம் பிணம்

மனிதனை ஆட்டி வைப்பது பணம்
மனதினை அலைபாய வைப்பதும் பணம்
இல்லாதவனுக்கு இழிவு தருவதும் பணம்
இருப்பவனை இறுமாப்படைய செய்வதும் பணம்

பணமும் வாழ்வின் தேவைதான்
பணம் மட்டுமே வாழ்வின் தேவையில்லை

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# கலைந்து போகாதே என் நிலவே

அவனையே என் நிலவாய் நினைத்து
என் நாட்களும் மெல்ல நகர்கின்றன

என்னவனை காண்கின்ற நாள் பௌர்ணமி
காணாத நாட்கள் எனக்கு அமாவாசை

இப்போதோ அவன் நினைவுகள் மட்டுமே
என்னுடன் நித்தம் பயணம் செய்கிறது

பிரிவை நினைத்து தினம் வாடுகிறேன்
காண்கின்ற இடமெல்லாம் அவனை தேடுகிறேன்

எனக்கான காதல் தூதாக செல்வாயா
மன்னவனிடம் எனக்காக கொஞ்சம் பேசுவாயா

என்னைப் போலவே ஒருத்தி தேய்ந்து
உனக்காகவே பொழுதும் காத்திருக்கிறாள் என்று!



கவிஞர் ஜாய்ஸ் வசந்தராஜ்

# குறும்பா

வானிடையே
அகலாங்கு நெட்டாங்கு கோடு வரைகின்றன
விமானப் புகை.



பாலைவனத்தில்
ஆங்காங்கே குட்டைகள் தெரிகின்றன
கானல் நீர்.

நட்சத்திரங்கள் விட்டு விட்டு ஒளிர்ந்து
சமிஞ்சை காட்டுகிறதே
ஏதும் ஆபத்தா?

இரவிலும் மேகங்கள் அலைகிறதே
துக்கத்தில் நடக்கும் வியாதியோ! .

சிறகசைக்காது பறவையொன்று போகிறது
ஒலி எழுப்பியபடி
விமானம்.

அப்படியென்ன செய்தியை கொண்டு போகிறது
செய்மதிகள் இரவில் ஒளிர்ந்தபடி.

விடியும் வரை யாரைப் பார்த்து காத்திருக்கிறது
அந்த விடிவெள்ளி.

ஒவ்வொரு வினாடியும் இடைவிடாமல்
அப்படி என்ன பேச்சி அலைக்கு
கரையுடன்.

இரண்டு வாரமாக திண்கிறதே
இரவு அந்த நிலவை வைத்து.

தூரச்சுற்றும் நிலவே
உன் கருவறை
பூமியின் பசுபிக் பெருங்கடலா.

வயல்வெளியில் ஆங்காங்கே
பசளைப் பைகள் பறக்கின்றன
தேசியக்கொடியாக.

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# வெளிர் மனம் கொண்ட வெய்யோன்

வழிந்தோடும் நீரைப் பிழிந்து எடுத்து
வானில் தேக்கி மேகத்துள் ஒடுக்கி
மழை பொழிந்திட மலையோரமாய்
மறைந்திருந்து பார்ப்ப தென்னவோ

வெளிர் மனம் கொண்ட வெய்யோனே
கடலில் குளித்து கண் அயர்கையில்
வண்ணம் பூசிய மேகங்கள் ஊடே
காணக் கோடிக் கண்கள் வேண்டும்

கண்விழித்து நீயும் கதிரொளி பரப்பிட
செழித்திடும் தளிர்கள் விழித்தெழும்
செந்தாமரையும் செவ்விதழ் பரப்பிட
சாளரம் வழியே சாமரம் வீசிடும்



விசித்திர தரிசனம் கண்டு வியந்திட
விழிகளாயிரம் வேண்டுமே
கடுகதிச் சுழற்சியில் காசினியும் சுழல
கிழக்கிலும் மேற்கிலும் கதிரொளி அழகு

மழை வெயில் இரண்டும் வேண்டும்
மண்ணில் விளையும் பயிர்கள் அருளே
அளவாய்ப் பொழிந்தால் யாவும் அழகே
எல்லை மீறிடின் யாதும் அழிவே

கவிஞர் ஷெண்பகச் சோலையாள்,ஆய்ஷ்(இலங்கை)

# கதிரவன்

செம்மையான பூமி
ஒரு பசுமையான இலை
ஒரு வெண்மையான பட்டாம்பூச்சி
ஒரு பறவையின்
மென்மையான கீச்சொலி
மேகங்களற்ற நீல வானம்
இவையனைத்தும்
தூய்மையான ஒளியின் மாயமே !



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# பிரார்த்தனை

ஆழமாய் நேசித்தவர்களின் பிரிவு
என்னைக் கதற வைக்கின்றது

அன்பான உறவுகளின் பிரிவு - என்
வாழ்வையே முற்றாய் வெறுக்க வைக்கின்றது

ஆறுதல் தந்த கரங்கள் எல்லாம்
என்னை விட்டுத் தொலைந்தே விட்டது

அன்று அரவணைத்த உதிரங்களை
இன்று காணவே முடியவில்லை

எனக்கு முன்னுரிமை அளித்த சொந்தங்கள்
இன்று நான் யாரென்பதையே மறந்துவிட்டனர்

உடைதல்களின் மொத்த உருவமாய்
நான் இங்கு நிற்கின்றேன்



அளவுக்கதிகமாய் காட்டப்பட்ட அன்பால்
நானும் நிர்க்கதியாய் தவிக்கின்றேன்

பாசத்திற்கான என் ஏக்கம் - என்னையே
இப்போதெல்லாம் தட்டுத்தடுமாற வைக்கின்றது

சொல்ல முடியாதளவு வலிகள்
என்னை நிலைகுழைய வைக்கின்றது

என் வாழ்வில் வந்து சென்றவர்கள்
அனைவரும் எங்கோ, எப்படியோ, ஏதோ
ஒரு ரூபத்தில் மகிழ்வெனும் வரத்தோடு
வாழ்ந்து கொண்டு தான் இருப்பார்கள்
அதுவே என் ஆசையும், பிரார்த்தனைகளும்

பரவாயில்லை
வலிகள் எனக்கானதாய் இருக்கட்டும்

என் உயிர் பிரியும் வரை
என் உணர்வுகள் தொலையும் வரை
நிச்சயம் என்றும் என் பிரார்த்தனையில்
அவர்களின் நலனுக்காய்,மகிழ்விற்காய்,
அரணைப்பிற்காய்
என்னில் ஓர் இடம் உண்டு

கவிஞர் நஸ்ரினா யூனுஸ்,கெகிராவை,அநுராதபுரம், இலங்கை

# கண்ணதாசனே! கண்ணதாசனே!

சிறுகூடல்பட்டியில் பிறந்தாய்
தமிழ்க் கடலில் நீந்தி,
பட்டி தொட்டி எங்கும் சிறந்தாய்
காதல் தேசத்தின் ஈசன் நீ
மாதரிடம் மயங்கும் வாசனும் நீ
மதுவும் மாதுவும் உனக்கப் பிடிக்கும்
திரையிசையும் கவிதைகளும் உந்தன் கை குலுக்கும்
பாடல் வரிகள் மாந்தர் நெஞ்சை உலுக்கும்
காதலும் தத்துவமும்
முத்தமிழால் பளபளக்கும்
காதல் கருத்துகளின் வழிநடை
மோதலின்றி உரைத்திடுமே தமிழின் மொழிநடை
சிரசின் மேல் வைத்து அரசு கொண்டாடியது
அரசவைக் கவிஞராக உன்னை.
மாங்கனியை (நூல்) படைத்து,
வர்ணனையால் ஏங்க வைத்தாய்
முனைவர் பட்டம் பெறாமலே புனைப்பெயரில்
இணையில்லாக் கவிதைகளைப் புனைந்தாய்
இதமான கருத்துகளால் அர்த்தம் உள்ள இந்து மதம் படைத்தாய்
இயேசு காவியம் என்றும் பேசிடுமே உன் புகழை
தத்துவப் பாடல்களால் பெற்றிட்டாய் தனி மகத்துவம்
தாமத வருகையை நியாயப்படுத்தவே
காயம் படாமல் சொல்வாய்
எனக்கு பிடித்த மதம் தாமதம் என்று
யாவரும் அறிவார் நீ மது அருந்தியதை
யாரும் அறியார்!
உன் மறைவுக்குப் பின் மது வருந்தியதை



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# நேருதலில் காதல்

வழி மேல விழி வெச்சு மச்சான் வருவாருன்னு
வஞ்சி நானும் நெதமும் காத்திருக்க!
வேதனைப்பட்டவளைக் காண சகியாம
வாட்டத்தைப் போக்கத்தான் நேருல வந்தாரே!

வெசனம் வேண்டாம் புள்ள உன்னைக் கூட்டிப் போக
வெரசா வந்திருவேன்னு உறுதியா சொன்னதோட
வீதி வழியே வந்த மச்சான்
வகையா கடுதாசி கொடுத்திட



வெவரமா அதை மறைக்க நானும்
வேகமா வீட்டுக்குள்ள போகையில
வீம்பான என் அப்பன் அதைக் கண்டு
வைராக்கியம் குறைஞ்சிடுச்சோன்னு

வேதனையாகக் கேட்டு விட
வெசனத்துல நானும் பேசாம நிற்கையில
வெளையாட்டுப் புள்ள இல்லை அவ
வெவரம் வந்துருச்சு ஐயான்னு

வடிவான என் அம்மா கோவத்துல பேச
வஞ்சி நானும் நொந்து போனேனே!
வித்தியாசமாப் பார்த்துப்புட்டு
வீம்பாய் இருந்த என் அப்பன்

வெக்கமா இல்லையான்னு கோபத்துல கத்துனவரு
வெசனத்துல நொந்து போனாரு!
வெளையாட்டாப் பேசிச் சிரிச்சது எப்பவோ
வெவகாரமானது ரெண்டு வீட்டுக்கும்!

வெளையாட்டு வெனையாச்சு
வேகமாப் பிரிஞ்சாச்சு!
வஞ்சி என்னை தேத்திடத்தான்
வெரசாத்தான் போனாரே என் மாமனைத் தேடி!

வைராக்கியம் போன எடம் தெரியலை
வக்கனையாகப் பேசுனவரு இப்போ
வாஞ்சையாப் பேசப் போனாரு

வடிவான என் மாமன் கிட்ட
வஞ்சி என்னைக் கட்டிக்கிட
வெரசா வரச் சொன்னாரு பரிசம் போட
வஞ்சி நானும் மகிழ்ந்து பார்க்க

வீம்பும் காணலையே எங்கப்பன் கிட்ட
வைராக்கியமும் காங்கலையே
வேதனை எனக்கு வேண்டாமுன்னு
வெவரமா யோசிச்சவரு வேகமா செஞ்சாரு!

வைபோகத்தை நடத்திடத்திடத்தான்
வீம்பாத்தான் இறங்கிட்டாரு
என் கண்ணால வேலைக்குத்தான்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# இறுகப்பற்று

இதயம் நுழைந்து
இன்னுயிர் கலந்து
இதமாய் இணைந்தாய்
இன்பத்தில் ஆழ்த்தினாய்

இடர்கள் களைந்தாய்
இசையாய் இருந்தாய்
இடை வெளியின்றி
இம்சைகள் செய்தாய்

இல்லறத்தில் படர்கொடியாய்
இனிதே தொடர்ந்து
இல்லாத சண்டைகள்
இயன்றளவு போட்டே



இறுக்கிப் பற்றிய
இதமான பிடியில்
இருந்து எப்போதும்
இளகிக்கி

இரும்பான பிடிக்குள்
இனிமை கண்டு
இருமன ஊடலில்
இழையோடிய நரம்பாய்

இதிகாசம் பேசும்
இறவா உறவாய்
இகத்தில் வாழ்ந்து
இன்புற்று வாழ்வோம்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

அகரமுதல

# பொருந்தாத பொழுது

பொருந்தாப் பொழுதில்
பொருந்தி வாழ்தலில்

ஏதோ பொருளுணரும்
மறைபொருளின் பொருள்

பிழை பொறுத்தலில்
துளி பொழுதில்நீளும்



மனதில் வரித்த வாசம்
தேடலில் துவங்கி

தேடல் எதுவென
நீண்டு உயரும்

புத்தி ஏற்கத் துணிந்தும்
மனதின் ஏற்பு ஐயமுறும்

எவரும் காத்திருக்காவிட்டாலும்
மழை நனைத்துவிட்டே செல்லும்

பொருள் தேடி
பொருளற்று தேங்காது!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# திறந்த கதவின் முன் நான்

யாரோ ஒருவன் சொல்லிவிட்டு செல்கிறான்
இவன் பைத்தியக்காரனென்று
குரைக்கின்றன நாய்கள்
அவனைப்பார்த்து

லுங்கியை மடித்து கட்டி
புகையிலுத்த ஆசாமிகளுக்கு
துணைபுரிகிறது
கொஞ்சம் வெளிர்த்த காலை பனி

காதுகளை கீறி உண்ணிகளை
வேரொடு உதறிவிடும்
நாய்களின் நகங்களின் கூர்மைதான்
தற்பொழுது விழுந்த எழுந்த
ஒரு முதியவரின் தலையிலிருந்து வடிந்த
இரத்தத் துளிகளாகிறது.



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# மந்திரப் புன்னகை

விதைப்பிலே விரிந்து
பரந்து பற்றிடும்
மொழிகள் தேவையின்றி
முழுதாய் ஆட்கொள்ளும்

அன்பிலே நித்தமும்
கவிதை நெய்து
அணைத்திடும் அகமும்
மனமும்



அழகிய ஆயுதம்
சத்தமின்றி சங்கமித்து
வளைத்திடும் வல்லமை
அன்பின் மொழிக்கு
அதிகாரம் செல்லாது

ஒற்றைப் புன்னகை
செய்யும் மந்திரம்
குளிர்வான ஸ்பரிசத்தில்
மனம் சிறகடிக்கும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# சுழல்

குடிநீர் தொட்டி
கழிவு கலக்கும்
இழி நிலை!

விளம்பு நிலை
மக்கள் வறுமை
வாசல் நிற்க!

மேற்கூரை விழுந்து
ஒழுகும் கல்விக்கூடம்!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# என்னைப் பிறந்தன்



பிரம்மன் படைத்த பேரழகே !
உன் பெயரும் அழகே!
இந்த பேரழகை காணவே
என்னைப் பிறக்க வைத்திருக்கிறாரோ
பிரம்மன்.
என்று நினைக்கிறது
எனது உள்ளம்.

கவிஞர் முனைவர் க குமார் சித்தாலிக்குப்பம்

# பாட்டி பேத்தி உறவு

சின்னஞ்சிறு தளிர் இவள்
சிங்கார குயில் இவள்.
சிலையென நின்றாலும்
சிரித்து மயக்கும்
செவ்வரளி பூ இவள்.



கோபக்கனல் மூட்டிடுவாள்
கொஞ்சிபேசி தணித்திடுவாள்.
பாசாங்கு செய்திடுவாள்
பாசமழை பொழிந்திடுவாள்.
முரட்டு பிடி பிடித்திடுவாள்
முத்தமழை தந்திடுவாள்.

கல்வெட்டு பதிப்பதுபோல்
அங்கத்தில் பல முத்திரைகள் வைத்திடுவாள்.
வலியுடன் துடிப்பது கண்டு
அழகாய் அரவணைத்து
அன்பால் அத்தனையும் மறக்க செய்திடுவாள்.

இடைவிடாது பாடல் போல
தொடர்ந்திருக்கும் இவளின் பேச்சு
இதயத்தை இதமாக வருடிச்சென்று
மனதை மயக்கும் மெல்லிய இசை.

ஏட்டிக்கு போட்டியென எதிர்த்து நின்றே
போர் புரியும் வீராங்கனை.
விழியால், மொழியால், அன்பால்,
அரவணைப்பால் வென்று
வீழ்திடும் வீரத்திருமகள்.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# தேநீர்

பசும்பாலில் தேயிலைத்தூள்
கலக்கும்போது
பிறக்கும் செந்நிற சாயம்
பருகிய இரண்டொரு நொடிகளில் என்
மனமெங்கும் பற்பல மாயம்

தித்திக்கும் திரவநிலை பலகாரம் - இது
காலைப் பொழுதுகளின் அலங்காரம்
தினமும் தீர்க்கும் பலர் மனபாரம்
இது என் உள்ளக்கடலின் முகத்துவாரம்



சர்க்கரை சற்றே குறைந்தாலும் - அவர்
அக்கரையோடு பகிரும் நேரம்
சட்டென தேநீரில் சுவைகூடும்
பட்டென பகையெல்லாம் பறந்தோடும்

இருமல்,காய்ச்சலோடு இயலாத நேரமது
இஞ்சி போட்ட தேநீர் போட்டு
இன்னும் பக்கம் நெருங்கையிலே
தேநீர் தீரும் தீக்காய்ச்சல் இன்னும் ஏறும்

இது கடைசி சொட்டு தேநீரல்லவா!

கடந்த கால கனிந்த நினைவுகளோடு
கடக்கப்போகும் காலம் எண்ணி - மனமெங்கும்
ஒரு கோப்பைத் தமிழ் நிறைய
ஒரு கோப்பைத் தேநீரோடு என்றும் நான்

கவிஞர் ச.நந்தினி

# மௌனமொழி

அனைத்தையும்
உணர்த்த
வாய்மொழி மட்டும்
போதுமானதாக இருப்பதில்லை
அவை சொல்ல முடியாததை கூட
உரக்க உரைத்துச் செல்கின்றன
சில மௌனங்கள்



கவிஞர் கீர்த்தனா. பு

# வரம்

அகக்கோவிலின்
கடவுள் தன்மை
கதவடைக்காவிட்டால்
புற தவமின்றி
நமக்கு நாமே
கொடுத்துக் கொள்ளும்
வரம்
மகிழ்ச்சி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# மாலவனும் வைணவமும் (பகுதி 16)

## (திருமழிசை ஆழ்வார்)

மழிசையார் ஆதியந்தம் மழிசையே! பின்பற்றினார்
வைணவநெறி! மால்பக்தி மிக்குடையார்! தத்துவமோ
வைணவமே! குருவானார் சேனையார்! யாத்திட்டார்
மாண்நான்முகன் திருவந்தாதி! நூறுவெண்பா! திருச்சந்த
விருத்தமது நூற்றிருபது! குடந்தையில் யோகப்பயன்
விளைவவையே! நாலாயிரம் தன்னிலவை மூன்றினிலே
முதலினிலே வைப்பாகும்! தோன்றியது தைமகத்தில்!
மாலவனின் சுதர்சனத்தின் அம்சமவர்! தேர்மாணவர்
கணிகண்ணர்! சமயம்பல நேராய்ந்து வைணவத்தின்
உயர்வுதேரல்! தெய்வங்களுள் நாரணணே மிக்கோனென
ஆய்ந்தறிதல்! சயனகோல பெருமாள்மேல் ஈடுபாடு!
உத்தான சயனத்தை உயர்வாகக் கொண்டாரே!
பரமயோகி! பரஞான முதிர்ச்சியினார்! திருமயிலை
பேயாழ்வார் ஆனாரே ஆசானாய்! பிறபெயர்கள்:-
பக்திசாரர்! நாவாளை உறையிலிடார்! குடமூக்கிர்
பகவரிவர்! மழிசையார்! மழிசைபிரான்! புகழ்மழிசை
குழந்தையிலா பார்கவமுனி யாகத்தால் அவர்துணைவி
கருவுற்றாள்! உருப்பில்லா பிண்டத்தைப் பெற்றாளே!
கருப்பையில் பனிரெண்டு மாதவாசம்! சீர்பிரம்புத்
தூற்றின்கீழ் விட்டனரே! இறையருளால் சுந்தரனாய்
வளர்ந்தொளிர்ந்தான்! அவ்வழியே வந்திட்ட பிரம்புத்தொழில்
தம்பதியர் திருவாளன் பங்கையச்செல் விகண்டெடுத்து
வளர்த்தனரே! கருவுற்றுப் பெற்றதேபோல் பால்சுரக்கக்
கண்டாளே! பருகிடவே மறுத்ததந்த பாலகனே!
அன்மைத்தாம் சிற்றூரின் மிகமூப்பு தம்பதியர்
கொணர்ந்தபாலைப் பருகியதே! உட்கொண்ட மிகுதிப்பால்
அவர்கட்குத் தந்ததனால் இளவயது திரும்பியதே!
ஆண்மகவு அவர்பெற்றார்! கணிகண்ணான் என்றபெயர்
இட்டதனை வளர்த்தனரே! பார்கவிச்சேய் மழிசையார்
சீடராகி மிளிர்ந்திட்டார்! மழிசைவழி தொழுவோமே!



-தொடரும்

கவிஞர் கணக்காயன்(இ.சே.இராமன்)

# தீபத் திருநாள்

இத்தனை நாளும்
இருண்ட வானம்,
இனி ஒளி தரவே
ஏற்றுவீர் தீபம்!

வறியவர் வாழ்வில்
விடியல் மலர,
விழைந்து ஏற்றுவீர்
வீடெங்கும் தீபம்!

கல்லாமை இருள்
இல்லாமல் ஒழிய,
கற்றோர் ஏற்றுவீர்
கல்வி எனும் தீபம்!

உழவும் தொழிலும்
உயர்நிலை பெறவே,
உவந்து ஏற்றுவீர்
உழைப்பெனும் தீபம்!

மன இருள் நீங்கி,
மனைநலம் சிறக்க.
மங்கையர் ஏற்றுவீர்
மங்கல தீபம்!

தீமை நீங்கி,
நன்மை தழைக்க
தீபத் திருநாளில்
குவலயம் எங்கும்
குன்றின்மேல் தீபம்!




ஆதியும் அந்தமுமில்லா
அரும்பெரும் ஜோதியாய்
இருப்பவரின் அருளாலே
வினைகள் பறந்தோடி
நல்விருப்பங்கள் நிறைவேறும்!

உலகம் முழுமைக்கும்
ஒளிவிளக்கய் விளங்கும்
கார்த்திகை தீபத்தைக்
கண்டு வழிபடுவோம்!

கவிஞர் ஈ.சீ சேஷாத்ரி

# மரண வேதனை



கலங்குதே ஆருயிர்களும் அகிலம் நிலை கண்டு
தினம் ஒரு நிபந்தனையில் மரண வேதனை
பசி பிணி இடைக்கே பாகப்பட்டு மனித மனம்
மாறாத துன்பங்களில் கண்ணீர்கள் தினம் தினம்
வலிகள் மட்டும் பின்னணியில் பலம் குறைந்து
பார்ப்பவர்களுக்கு காட்சிகளாகவும்
படிப்பவர்களுக்கு நீச்சிகளாகவும்
நிலையில்லாத நிபந்தனையில் நீதியும் அரை நிமிடம்
ஆங்காங்கே கொட்டி தீர்க்கிறது
குலமில்லா குடியுரிமை கொண்டு
கண்கள் மனம் இல்லாமல் மனம் நிலையில்லாமல்
மாறுபட்ட வேட்டை தொடங்குதே ஒரு கோட்டையில்
கொடியும் கூத்தாடையும் மேலோங்கி குடிமக்கள் கீழ் ஓங்கி
சங்கடம் தீர்க்க தீர்க்க சங்கீகள் மெய் கீர்த்தி வளர வளர
வானும் மண்ணும் வையகத்தில் பொன்னும்
போட்டி போடுதே மரண வேதனையில்
குருதி கலம் மட்டும் தினம் ஒரு சின்னங்களாக
ஆங்காங்கே பொது இடங்களிலும் போர்க்களங்களிலும்
குருதி துளிகளே பின் நாட்களில் வரலாறு
அவனின் அடையாளமே.

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# ஹைக்கூ

மழைக் காலம்
தற்காலிகமாக நடையைச் சாத்திக் கொண்டது
ஒத்தையடிப்பாதை.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# இதயம் துடிக்கும்

இதயம் நுழைந்து
இதழில் விரிந்தே
இரவின் இருளிலும்
இனிய கனவுகளாய்

கைரேகை திசையறியா
கையேடு தேடுமே
பார்வையின் கணைகள்
பாய்ந்தே கனமாக்கும்

கண்ணோடு கண்கலந்தே
கவிழும் நெஞ்சில்
அதிகாலை உதயத்தின்
அகாலச் செம்மை

வாசம் சேர்க்கும்
வானிலை விளங்கும்
விடியலின் கதிர்கள்
விரிந்தே தவிக்கும்



நேரிசை வாழ்த்துப்பா
நேசக்கரம் விரிக்கும்
காரணம் தேடியே
காணாதே துடிக்கும்

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# இயற்கை

பஞ்சபூதங்கள்
அனைத்தும் உன்
குழந்தைகள்!

நீ பள்ளிகொள்ளுமிடம்
நீர்மை !

நீ பாய்விரிக்கும் இடம்
குளுமை!

நீ பயிலுமிடம்
தனிமை !

நீ உறங்குமிடம்
இனிமை!

நீர் மொத்தத்தில்
பசுமை ! பசுமை!

நீ இல்லையேல்
எங்கும் தீமை !



அகர முதல

கவிஞர் முனைவர் சி.சுகந்திர வனிதா,உச்சிப்புளி, இராமநாதபுரம்

# வாழ்க்கை என்னும் கவிதை

**நவீனம்** **பச்சை விளக்கு**



இரயில்வே நிலையத்திற்கு வந்ததும் சாமான்களை இறக்கி வைத்து விட்டு கார்களுக்கு வாடகை பணம் கொடுத்து அனுப்பி விட்டு வந்தான் சிவா. டிக்கெட் பரிசோதகர் வழி மறித்து டிக்கெட்டை பரிசோதித்து விட்டு "இவ்வளவு பொருட்கள் கொண்டு போகிறீர்கள் மொத்தம் மூன்று பேர்தானே பயணம் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஆமா சார். பொருட்கள் அதிகம் வெயிட்டில்லை. நூற்றிருபது கிலோவிற்கு மேலே இருக்காது சார்" என்றான் சிவா.

ராணி அம்மாள் முந்திக் கொண்டு "முதல் முதலாக மும்பைக்கு போறாங்க இப்படி தடைக் கல்லாட்டம் சோதிக்க வந்து விட்டீர்களே" என்று கத்தினாள்.

என்ன நினைத்தாரோ டிக்கெட் பரிசோதகர். "சரி சரி போங்கள்" என்று நகர்ந்து விட்டார்.

ரயில்வே நிலையத்திற்குள் வந்ததும் பொருட்களை அந்தந்த வண்ணமே ஒரு பெஞ்சின் அருகில் வைத்து விட்டு புவனாவும் ராணி அம்மாளும் அமர்ந்தார்கள்.

திவ்யா தூக்கம் விழித்தெழுந்து "அம்மா பால்" என்றாள். கண் விழிக்காமலே. ஞாபகமாக புவனா எடுத்து வந்திருந்த பிளாஸ்கை திறந்து பாட்டிலில் அடைத்து திவ்யாவின் வாயில் கொடுத்தாள்.

பாலைக் குடித்தவள் கண்ணைத் திறந்து "அத்தா நாம் எங்கே வந்திருக்கோம்" என்றாள் திவ்யா.

…… மும்பை போறதுக்கு அதான் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருக்கோம். ரயில் வந்ததும் ரயிலிலே ஏறிப்போகணும்" என்றாள்.

"வா. திவ்யா போய் முகம் கழுவி விட்டு வரலாம்" என்றன் சிவா.

"ம்கூம்" என்றாள் திவ்யா.

"சரி நீ அத்தா கிட்டே இருந்துக்கோ. நானும் மாமாவும் டீ குடிச்சிட்டு வரோம். புவனா உனக்கும் அம்மாவிற்கும் காபியா டீயா?" என்று கேட்டான்

இரஜகை நிலவன்

"எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் போய் சாயா குடிச்சிட்டு வாங்க" என்றாள் புவனா.

"அப்பா நானும் வரட்டுமா" என்று எழுந்து சிவாவிடம் வந்தாள் திவ்யா. "சரி வா." திவ்யாவைத் தூக்கிக் கொண்டு திவாகருடன் டீ கடைக்கு வந்தான் சிவா.




-தொடரும்

இரஜகை நிலவன்

# சீத்தலைச் சாத்தனார்

கட்டுரை



சீத்தலைச் சாத்தனார் 'நன்னூற் புலவன்', 'தண்டமிழ்ச் சாத்தன்' என்று போற்றப்படுகிறார்

சீத்தலைச் சாத்தனார் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களில் ஒருவர் ஆவார்.சீத்தலை என்ற ஊரில் பிறந்தவராக இருந்திருக்கக் கூடும். இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்றும் தானிய வணிகம் செய்தவர் என்றும் இலக்கியத் தகவல்கள் கிடைக்கின்றன.

புத்த சமயக் கொள்கையைக் கொண்டிருந்த 'சாது' (சாத்து) என்பதாலோ 'சாத்து' என்கிற வணிக தலைவராக இருந்ததாலோ சாத்தன் என அழைக்கப்பட்டிருக்கிறார்.

சீத்தலைச் சாத்தன் என்கிற பெயரிலேயே மேலும் ஒரு சில புலவர்கள் இருந்ததனால் அவர்களிலிருந்து அடையாளம் பிரித்துக் காட்டுவதற்காக இவர் 'மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தன்' என அழைக்கப்படுகிறார்.

இவர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர். இவர் இயற்றிய மணிமேகலை என்னும் காப்பியம் புத்த சமயக் கொள்கைப் பரப்பு நூலாகும்.


நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களிலுள்ள சில பாடல்களைப் பாடிய சீத்தலைச் சாத்தனார் என்பவர் இவருக்கு முன்பு வாழ்ந்த வேறொரு புலவர் ஆவார்.

அ வில்சன் இதழாசிரியர்

# சீத்தலைச் சாத்தனார்


கட்டுரை

பாட்டியல் நூல் செய்த சீத்தலையார் என்பவரும் வேறு ஒருவர் ஆவார்.



சிலப்பதிகாரம் இயற்றிய சமணத் துறவி இளங்கோவடிகள் மணிமேகலை இயற்றிய சீத்தலைச் சாத்தனாரின் மிக நெருங்கிய நண்பராக இருந்ததாக அறியப்படுகிறது.

கூலவாணிகன் சாத்தனார் மணிமேகலையை இயற்றினார். தமிழில் தோன்றிய முதன் முதலான சமயக் காப்பியம் இது. புத்த மதச் சார்புடைய பேரிலக்கியம்.




இந்நூலில், இளமை, இன்பம், யாக்கை, செல்வம் முதலியன நிலையாமையுடையது என்றும் களவு, கொலை, கள், காமம் முதலியன துயரைத் தரும் என்றும்,

இதில் பரத்தை ஒழிப்பு, மது ஒழிப்பு, பசியொழிப்பு, சாதியொழிப்பு, சிறையொழிப்பு எனும் சீர்திருத்தக் கொள்கைகளை நிலைநிறுத்தவும் எழுதப்பட்டுள்ளது.

சாத்தனாரும் இளங்கோவடிகளும் சமகாலத்தவர். ஒன்றாக வாழ்ந்தவர். எனவே, சிலம்பின் தொடர்புடைய மணிமேகலை என்பதால் இவற்றை இரட்டைக்காப்பியம், என்றும் கூறுவர்.

அ வில்சன் இதழாசிரியர்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முதலும் தமிழே!!

# சீத்தலைச் சாத்தனார்

கட்டுரை

இக்காப்பியத்தில் பிறப்பைப் பற்றி சாத்தனார் கூறுகிறார்.

"பிறந்தார் உறுவது பெருகிய துன்பம் பிறவார் உறுவது பெரும் பேரின்பம் பற்றின் வருவது முன்னது" - என்று மனிதர் அடையும் துன்பங்கள் யாவும் பேராசையால் தான் வருகிறது என உணர்த்துகிறார்.

மேலும் நிலையாமையைப் பற்றி கூறுகையில்:
"இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா புத்தே ளுலகம் புதல்வரும் தாரார் மிக்க அறமே விழுத்துணை யாவது" என்றும்,

பசியின் கொடுமையை
"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள், மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்...."

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" - என்றும் "தெய்வம் தொழஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப் பொய்யில் புலவன் பொருளுரை தேராய்" - என்று திருவள்ளுவரின் குறளை அப்படியே தன் பாடலில் புகுத்தி அறத்தை வலியுறுத்துகிறார் சாத்தனார்.


நிலையாமையுடைய மனித இனத்தில் மன்னுயிர்க்கெலாம் உண்டி, உடையளித்து அறிவழியில் நடத்தலே பிறவிப்பயன் என்பதை 'மணிமேகலை' காப்பியத்தின் மூலம் உலகுக்களித்த சாத்தனார்

அ வில்சன் இதழாசிரியர்

# சீத்தலைச் சாத்தனார்

## கட்டுரை

நிலையாமையுடைய மனித இனத்தில் மன்னுயிர்க்கெலாம் உண்டி, உடையளித்து அறிவழியில் நடத்தலே பிறவிப்பயன் என்பதை 'மணிமேகலை' காப்பியத்தின் மூலம் உலகுக்களித்த சாத்தனார் நெறியை தமிழினம் பின்பற்றும் என்பதில் ஐயமில்லை.




நன்றி : ⇨தமிழ் வளர்த்த தமிழ்த்தொண்டர்கள்,டாக்டர் அறிவுச்சுடர்
⇨விக்கிபீடியா

அ வில்சன் இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
லட்சியம்
இருக்குமிடத்தில்
அலட்சியம்
இருக்காது
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com